2000

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பொதுப் பணிகள் - அண்ணா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் மருத்துவ இயற்பியல் முதுநிலைப் பட்ட படிப்பினை (M.Sc Medical Physics) அறிவியல் முதுநிலை பட்ட படிப்பிற்கு (Post Graduate Degree in Science) இணையாகக் கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

### பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசாணை (நிலை) எண்.15

நாள் 27.01.2000
பிரமாதி, தை,13
திருவள்ளுவர் ஆண்டு 2030.

படிக்கப்பட்டது:

1. அண்ணா பல்கலைக் கழகப் பதிவாளரது கடித எண்.26442/PD-4/87, நாள் 10.02.1988.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண்.6777/RND-A5/91, நாள் 17.09.1996.

---

ஆணை:

அண்ணா பல்கலைக் கழகப் பதிவாளர், தங்களது பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் மருத்துவ இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பை (M.SC., Medical Physics) முதுநிலை இயற்பியல் பட்டப் படிப்பிற்கு (M.Sc., Physics) இணையாகக் கருதி பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்காக அங்கீகரிக்குமாறு வேண்டுகோள்களுள் ஒன்றாக அரசைக் கேட்டுள்ளார்.

2. 20.12.1993 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை நிலை எண் 441-ல் ஆணையிட்டவாறு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரைத் தலைமையாகக் கொண்டு இதற்கென அமைக்கப்பட்ட குழுவின் முன்னர் அண்ணா பல்கலைக் கழகப் பதிவாளரது கோரிக்கை பரிந்துரைக்காக வைக்கப்பட்டது.

3. 19.08.1996 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு, முதுநிலை இயற்பியல் பட்ட மேற்படிப்பு (M.SC. Physics)

நியமனத்திற்குக் கல்வித் தகுதியாக எங்கெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் அவற்றிற்கு இணையாக மருத்துவ இயற்பியல் முதுநிலைப் பட்டப் படிப்பைக் (M.Sc. Medical Physics) கருத முடியாது என்று முடிவு எடுக்கப்பட்டது. மேலும், அறிவியல் முதுநிலை பட்டப் படிப்பு (Post Graduate Degree in Science) கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் நியமனத்திற்கு மருத்துவ இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பை (M.Sc. Medical Physics) அங்கீகரிக்கலாம் என குழு பரிந்துரை செய்துள்ளது.

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனைக்குப் பின் ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, "எங்கெல்லாம் முதுநிலை இயற்பியல் பட்ட மேற்படிப்பு (M.Sc. Physics) நியமனத்திற்குக் கல்வித் தகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் அவற்றிற்கு இணையாக மருத்துவ இயற்பியல் முதுநிலை பட்டத்தைக் (M.Sc. Medical Physics) கருத முடியாது என்றும், மேலும் அறிவியல் முதுநிலை பட்டப் படிப்பு (Post Graduate Degree in Science) கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் நியமனத்திற்கு மட்டும் மருத்துவ இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பை (M.Sc. Medical Physics) அங்கீகரிக்கலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

1. அனைத்து அரசு செயலாளர்கள், சென்னை - 9.
2. அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்,
3. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை -2.
4. பதிவாளர் அண்ணா பல்கலைக் கழகம், சென்னை - 25.

<u>நகல்</u>

1. முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
2. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலுள்ள அனைத்து பிரிவுகள், சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்